செய்தி வெளியீடு எண். 515 /2010 நாள்: 15.7.2010

**மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்- தொலைக்காட்சிகளில் கவனம் செலுத்த கூடாது- மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.**

வேலூர் மாவட்டம் வாலாஜா அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் 108-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன் தலைமையேற்று மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசுகையில்:

கல்விக்கு கண் கொடுத்த காமராஜர் பிறந்த நாள் தமிழகத்திலுள்ள அனைத்து கிராமபுற மக்கள், ஏழை எளி மக்கள், பாட்டாளி மக்கள் ஆகியோர் நல்ல நிலை அடைய கல்வியை கொடுத்தவர் காமராஜர். தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர் காமராஜர். இந்த அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கடந்த ஆண்டும் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டும் இங்கு கொண்டாடுவதற்கு காரணம் இந்த பள்ளி கடந்த ஆண்டை விட வேலூர் மாவட்டத்திலே முதல் பள்ளியாக தேர்ச்சி பெற்றுள்ளது.

ஏழை எளிய மக்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்று அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த காலங்களில் நாங்கள் படிக்கும் போது ஓலை குடிசை, ஓட்டு போட்டு வகுப்பறைகளில் கல்வி படித்தோம். அப்போது படிப்பதற்க நவீன வசதிகள் கிடையாது. ஆனால் இன்றோ தமிழக அரசு மாணவர்கள் தரமாக கல்வி பயில வேண்டும். தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன் இன்று கல்வி கூடங்கள் உள்ளன. எனவே மாணவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் டி.வியில் கவனம் செலுத்துவதை விட பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும். தொலைக்காட்சியில் கல்வி சம்மந்தப்பட்டதை பாருங்கள். விளையாடும் நேரத்தில் விளையாடுகள். படிக்கும் நேரத்தில் படியுங்கள் என்று மாணவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

வாலாஜா அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்ச்சி விகிதத்தில் 93% சதவிகிதம் பெற்று மாவட்டத்திலே முதல் இடம் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல கல்வியை கற்றுத்தர வேண்டும். மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஆசிரியரின் பங்கு மிக மிக முக்கியமானது. மாணவர்கள் தரமான கல்வி பயின்று அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தவைர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

விழாவில் 10-ம் வகுப்பு, மற்றும் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.ஷீலாராஜன், வாலாஜா நகரமன்ற தலைவர் திரு.வி.நித்தியானந்தம், முன்னாள் நகரமன்ற தலைவர் திருமதி.ராஜராஜேஸ்வரி, வாலாஜா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு.கே.தசரதன், நகரமன்ற உறுப்பினர் திரு.என்.சதீஷ்குமார், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் (பொ) திரு.என்.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்நிகழ்ச்சியினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார் தொகுத்து வழங்கினார்.

முன்னதாக முதன்மை கல்வி அலுவலர் திரு.கோ.மூர்த்தி அனைவரையும் வரவேற்றார். முடிவில் வாலாஜா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.ஆ.மணிவண்ணன் நன்றி கூறினார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர் - 9.